புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மே (May) 21, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 21 • விலை(PRICE) ரூ.6.00

## தோப்புக்கரணம் போடுகிறார்!



சபாஷ்! வாழ்த்து என்று பூரித்து பூங்கொத்து கொடுத்து மாலையிட்டு பாராட்டு விழா நடத்தத் துடிக்கிறோம்; அப்படி யாருக்கப்பா! பாராட்டு விழா என்று கேட்கிறீர்களா? சொன்னால் அதிர்ச்சியாக இருக்கும்! இந்து மக்கள் கட்சி அர்ஜுன் சம்பத்தான் அந்த பாராட்டுக்குரிய 'மகாபுருஷர்'. அப்படி என்ன சாதனை செய்துவிட்டார்? 'பிராமண' சேவையை கைக்கழுவி விட்டாரா? எதற்கெடுத்தாலும் இந்து விரோதி என்று கூச்சலிடமாட்டேன் என்று சபதமெடுத்துவிட்டாரா? 'பிராமணர்'களைக் குறை கூறினால் மேடையில் கொதித்தெழுந்து அடிக்க பாயமாட்டேன் என்று முடிவெடுத்துவிட்டாரா? அப்படியெல்லாம் இல்லை!

இனி இந்து மதத்தை எதிர்த்தால் மிரட்ட மாட்டேன்; நீதிமன்றம் போக மாட்டேன்; ஆர்ப்பாட்டம் நடத்த மாட்டேன்; மாறாக கடவுளிடம் மனு கொடுப்பேன் என்ற முடிவுக்கு அவர் வந்திருக்கிறார். "சனாதனத்தை எதிர்க்கும் உதயநிதிக்கு நல்ல புத்தியைக் கொடு!" என்று கோவை புளியங்குளம் விநாயகரிடம் தோப்புக்கரணம் போட்டார் சம்பத் என்று தினமலர் செய்தி வெளியிட்டு இருக்கிறது.

"ஓ விநாயகனே.. யானை முகத்தோனே; தும்பிக்கை நாயகனே; இது அடுக்குமா? சனாதான எதிர்ப்புக்காரர்கள் தமிழ்நாட்டில் வேக வேகமாக வளர்ந்து வருகிறார்களே; அவர்களுக்கெல்லாம் நல்ல புத்தி தந்து சனாதன ஆதரவாளராக மாற்ற மாட்டாயா? உனது சக்தி எங்கே போனது? உனது தும்பிக்கையை சுழற்ற வேண்டாமா?" என்று அர்ஜுன் சம்பத் கடவுளிடம் மூச்சுமுட்ட தோப்புக்கரணம் போட்டு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். சனாதன தர்மம் என்றால் அது ஜாதிப் பாகுபாடுகளை பிறப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கும் வர்ணாசிரமம்தான்; அதைத்தான் எதிர்க்கிறோம் என்று உதயநிதி தெளிவுபடுத்தி இருந்தாலும் அதற்கு காது கொடுக்க அர்ஜுன் சம்பத் தயாராக இல்லை!

இல்லை.. இல்லை! சனாதனம் என்றாலே இந்து மதம்தான் என்று சாதிக்கிறார். உதயநிதியைப் போலவே தமிழக வெற்றிக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் சனாதன எதிர்ப்பு பேசுகிறார்களே; முதலமைச்சர் விஜய் இதை கண்டிக்கவில்லையே! எல்லோருக்கும் நல்லபுத்தி தரமாட்டாயா? என்றும் தன்னுடைய தோப்புக்கரண வேண்டுதலில் இணைத்திருக்கிறார் அர்ஜுன் சம்பத்.

அப்பாடா! கடவுளுக்கு சக்தி இருக்குமென்று இப்பத்தான் அவரது புத்தியில் எட்டியிருக்கிறது போலும். அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். தன்னை எதிர்ப்பவர்களை கடவுள் தண்டிப்பார் என்ற நம்பிக்கை வந்துவிட்டதே.

சனாதனவாதிகள் சனாதன தர்மத்தை காப்பாற்றத் துடிப்பவர்கள் இப்படித்தான் தங்களுடைய கோரிக்கைகளுக்காக போராட வேண்டும் என்பது நமது வேண்டுகோள். நீதிமன்றங்களுக்கு போகக் கூடாது; வீதிகளில் வந்து ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது; கலவரங்களில் ஈடுபடக்கூடாது; தோப்புக் கரணம் போட்டது போல் வேறு சில போராட்ட வடிவங்களையும் நாம் பரிந்துரைக்கிறோம். காவடி தூக்கி மயக்கம் வரும் வரை ஆடலாம்; தீக்குழியில் இறங்கி ஆண்டவன் கவனத்தை ஈர்க்கலாம்; இன்னும் தீவிரமாக போராட நினைத்தால் தீயில் ஓடாமல் அப்படியே நின்று 'தவம்' செய்து 'சனாதனிகள் ஒழிக!' என்று திருவாயால் உச்சரிக்கலாம்; பழனிக்கு பாத யாத்திரை போகலாம்; கிடா வெட்டி பூஜை போடலாம்; கோயிலைச் சுற்றி அங்கப்பிரதட்சணம் செய்யலாம், இப்படி ஏராளமான வேண்டுதல் பட்டியல்கள் நம்மிடம் இருக்கின்றன.

என்னடா இது கூத்து! உண்மையான சக்தி இந்த கடவுளுக்கு இருந்தால் சனாதன எதிர்ப்புகளை பேச அனுமதித்து இருப்பானா? அப்படியே சனாதனதத்தை எதிர்த்துப் பேசினால் 'சம்ஹாரம்' செய்து தலையை வெட்டியிருக்க மாட்டானா?

அட சந்துமுன்னணிகளே! இது கடவுள் பிரச்சனை இல்லையப்பா; இல்லாத கடவுள் பெயரால் சில இருக்கிற கயவர்கள் திணித்த கொடுமையப்பா! என்று கேட்கிறார் ஒரு மானமுள்ள சுயமரியாதைக்காரர்!.

– கோடங்குடி மாரிமுத்து

### கொளத்தூர் மணி, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் மயூரப்ரியன் உரை

## மாணவர்களுக்கு சமூக அரசியல் பயிற்சி




இளைய தலைமுறைக்கு சமூக அரசியல் வரலாறுகளைப் புரிய வைக்கும் தேவை உருவாகி இருக்கிறது. இட ஒதுக்கீட்டு உரிமையைப் பயன்படுத்தி கல்வி வேலைவாய்ப்புகளைப் பெறும் மாணவர்களுக்கு அந்த இட ஒதுக்கீட்டின் வரலாறு, நோக்கம் பற்றிய புரிதல் இருப்பது இல்லை! சமூகம் மற்றும் கல்வி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுக்கு ஜாதி ஒரு அடையாளமாக ஏன் ஏற்கப்பட்டது என்ற சமூகப் புரிதலை இளைஞர்களிடம் விளக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இட ஒதுக்கீட்டு கொள்கைகள் செயல்பாட்டுக்கு வருவதற்கு முன்பு மனுஸ்மிருதி அடிப்படையிலேயே சமூகத்தில் இட ஒதுக்கீடு இருந்தது. அதன்படி பிராமணர்களே கல்வி கற்கும் உரிமையை பெற்றிருந்தார்கள்; 'சூத்திரர்கள்' பிராமணர்களின் அடிமைகளாகவும், அவர்களுக்கு கல்வியே கிடைக்காமல் தடை செய்யப்பட வேண்டும் என்பதுமே எழுதப்படாத சமூக சட்டமாக இருந்தது. சமூகத்தை மனுஸ்மிருதி வழியாக பார்ப்பனர்கள் தங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தார்கள். சேர, சோழ, பாண்டியர்கள் மன்னர்களாக இருந்தாலும் அவர்கள் பள்ளிகளைக் கட்டவில்லை; கோயில்களைக் கட்டி பார்ப்பனர்களை அதிகாரத்திற்கு கொண்டு வந்தார்கள். மன்னர்களை வழிநடத்துபவர்கள் பார்ப்பனர்களாகவே இருந்தார்கள்.

எந்த ஒரு தமிழ் மன்னரும் திருக்குறளைப் பரப்பவில்லை; சமஸ்கிருத, வேத பாடசாலைகளையே நடத்தினார்கள். பார்ப்பனர்களுக்கு கிராமங்களை தானமாக வழங்கினார்கள். அவர்கள் எந்த வரியையும் செலுத்த வேண்டியது இல்லை. இதை எதிர்த்துதான் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் இயக்கங்கள் போராடி இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தது என்ற வரலாறுகளை இப்போது இளைஞர்களுக்கு கொண்டு சேர்க்கும் ஒரு முக்கிய பணியை இந்திய சமூக ஆய்வு மையம் (CISS) முன்னெடுத்துள்ளது. போராசிரியர் கனகவிநாயகம் அவர்களின் முன்னெடுப்பில், CISS (Centre for Indian Social Studies) சமூக அறக்கட்டளை சார்பாக சமூக அரசியல் பயிலரங்கம் மே-16,2026 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செங்கல்பட்டு மறைமலை நகர் பகுதியில் உள்ள அய்யனார் மெஸ்சில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில், இன்றைய அரசியல் சூழலில் ஏன் திராவிடக் கொள்கை அவசியம் என்பதை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைத்தார். ஆரம்பகால இடஒதுக்கீட்டுப் போராட்டங்கள் முதல் இன்று வரை நடைபெற்று வரும் 10% இட ஒதுக்கீடு எதிர்ப்பு அரசியல் மற்றும் சமூக நீதி சார்ந்த போராட்டங்கள் வரையிலான பல முக்கிய வரலாற்றுப் பின்னணிகளை மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார். மாணவர்களின் கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்களை அவர் வழங்கிய விதம் பயிலரங்கிற்கு மேலும் ஆழத்தை சேர்த்தது. "ஒருவருக்கு என்ன வேண்டும் எனத் தெரிந்து, அவர்கள் அதைப் பெறுவதற்கான உதவி செய்வதும்", "யார் ஒருவர் உரிமை பெறுவதைத் தடுக்கும் தடைகளை உடைப்பதுமே அரசியல்" என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், "சரி எனத் தெரிந்தும் அதை நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் அறிவாளிகளுக்கும், எதுவுமே தெரியாமல் இருக்கும் முட்டாள்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை; எனவே சரி எனத் தெரிந்து அதை நடைமுறைப்படுத்தும் நபர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் மயூரப்ரியன் பேசுகையில், இளமையூட்டும் உரைநடை மற்றும் மாணவர்களை ஈர்க்கும் செயல்முறை அணுகுமுறையால் வகுப்பை உயிர்ப்பூட்டினார். மாணவர்களுடன் பல சுவாரஸ்யமான விளையாட்டு மற்றும் கலந்துரையாடல்களை நடத்தி, அதன் வாயிலாக இடஒதுக்கீட்டின் தேவையையும் சமூக நீதியின் அடிப்படைகளையும் மிகவும் எளிமையாகவும், மாணவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் புரிய வைத்தார். அவரின் உரை மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், பயிலரங்கத்தை மேலும் சிறப்புமிக்க ஒன்றாக மாற்றியது.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் திராவிட சிந்தனையையும், சமூக நீதியின் அரசியல் அவசியத்தையும் குறித்து விழிப்புணர்வை உருவாக்கிய ஒரு பயனுள்ள, சிந்திக்க வைக்கும் பயிலரங்கமாக இந்நிகழ்வு அமைந்தது. இதில் 40 மாணவ, மாணவியர், இளைஞர்கள் மற்றும் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், கவியரசு ஆகிய கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

## மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சந்திப்பு!



திமுக தலைவர் மு.க ஸ்டாலின் அவர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள அவரது இல்லத்தில் மே-15, அன்று பகல் 12-மணியளவில் சந்தித்தனர். தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி ஆகியோர் உடனிருந்தனர். முன்னாள் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மகிழ்ச்சியுடன் வரவேற்று மனம் திறந்து உரையாடினார். "ஆட்சியில் இருந்தபோது உங்களை நாங்கள் சந்திக்கவில்லை; இனி அடிக்கடி சந்திப்போம் என்று கூறி விடைபெற்றனர்".

# உமர்காலித் பெற்றுத்தந்த தீர்ப்பு!

ஒன்றிய ஆட்சியின் அடக்குமுறை சட்டங்களில் ஒன்றான உபா. (Unlawful Activities Prevention Act) சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் என்று பெயர் சூட்டப்பட்ட இந்த சட்டமே அரசியல் சட்டத்திற்கு எதிரான சட்டம் என்று சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர். பிணை வழங்காமல் நீண்டகாலம் சிறையில் அடைத்து வைப்பதற்காகவே இந்த சட்டம் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது. இந்த சட்டம் குறித்து அண்மையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.நாகரத்னா மற்றும் உஜ்ஜல் உயான் ஆகியோர் அடங்கிய அமர்வு அளித்துள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கதாகும். உபா சட்டத்தில் கைதானவர்களுக்கும் பிணை வழங்கலாம் என்று கூறிய நீதிபதிகள் “பிணை என்பது விதியாகவும்; சிறை என்பது விதிவிலக்காகவும் இருக்க வேண்டும்” என்ற கருத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். அதுமட்டுமல்ல ஏற்கனவே இந்த வழக்குகளில் உச்ச நீதிமன்றமே பிணை வழங்க மறுத்திருப்பதை நியாயப்படுத்த முடியாது என்றும் அந்த தீர்ப்புகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் நீதிபதிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த சையத் இப்திகார் அந்த்காமி என்பவர் உபா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு 5-ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார். போதைப் பொருள் கடத்தி தீவிரவாதிகளுக்கு நிதி அளித்தார் என்பது குற்றச்சாட்டு. எவ்வித விசாரணையும் இன்றி சிறையில் அடைக்கப்பட்டிருப்பதை ஏற்க மறுத்து உச்ச நீதிமன்றம் இப்போது பிணை வழங்கியுள்ளது. இதேபோல் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் மாணவர் தலைவர் உமர்காலித் உள்ளிட்ட 7 பேர் மீது குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்த்து கலவரத்தைத் தூண்டினார்கள் என்று குற்றம்சாட்டி கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். குடியுரிமைத் திருத்த சட்டத்தை எதிர்த்து மாணவர்களைத் திரட்டி அமைதி வழியில் ஆர்ப்பாட்டம் நடத்தினார் உமர் காலித். அப்போது அவர் ஆற்றிய உரை மதக் கலவரத்தை தூண்டி வன்முறைக்கு வித்திட்டது என்று பல்வேறு வழக்குகளில் குற்றம் சாட்டி சிறையில் அடைத்தார்கள். இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சிலருக்கு ஏற்கனவே பிணை வழங்கப்பட்டுள்ளது.

உமர் காலித் மீது வன்முறையைத் தூண்டியதாக இரண்டு முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன. ஒரு வழக்கில் உமருக்கு ஏப்ரல் 2021-ல் பிணை வழங்கப்பட்டது. 2-வது வழக்கில் அவர் மீது சட்டவிரோத தடுப்பு நடவடிக்கைகள் சட்டத்தின் (உபா) பிரிவின்கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கில் இதுவரை இரண்டு நீதிமன்றங்கள் அவரது பிணை மனுவை நிராகரித்துள்ளனர். அவரது பிணை மனு ஏப்ரல்-2023 முதல் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்தது. ஏற்கெனவே 2021-ல் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வின் தீர்ப்பு உபா சட்டத்தின் கீழ் பிணை வழங்க மறுத்தது. இப்போது 2 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கூடுதல் நீதிபதிகள் கருத்தை மறுத்து பிணை வழங்கலாம் என்று தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கு மிகவும் பலவீனமானது; உமர்காலித்துக்கு எதிராக சாட்சிகள் இல்லை அந்தக் கலவரத்தின் போது உமர்காலித் டெல்லியிலேயே இல்லை என்றும் நீதிமன்றத்தில் கபில்சிபல் வாதாடினார்.

பிப்ரவரி 2020-ல், வடகிழக்கு டெல்லியில் கலவரங்கள் வெடித்தன. இதில், பெரும்பாலும் முஸ்லிம்கள் உட்பட 53 பேர் உயிரிழந்தனர். இந்தப் போராட்டங்களின் போது வன்முறையைத் தூண்டுவதற்காக உமர் காலித் மற்றவர்களுடன் சேர்ந்து சதி செய்தார் என்றும், அதுவே கலவரங்களுக்கு வழிவகுத்தது என்றும் அரசுத் தரப்பு குற்றம் சாட்டியது. 5 ஆண்டுகளாக இந்த வழக்கில் விசாரணையே தொடரப்படாமல் முடங்கிக் கிடந்ததை இப்போது உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கிறது. ‘ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல்’ உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் உமர்காலித் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக கண்டனங்களைத் தெரிவித்தன. இந்த 5-ஆண்டுகளில் அவரது சகோதரி திருமணத்திற்காக மட்டும் ஒருவாரம் அவருக்கு பரோல் வழங்கப்பட்டது.

ஏற்கனவே அப்சல்குருவுக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை எதிர்த்துப் பேசியதற்காக அவர் மீது தேசத் துரோக குற்றம் சாட்டப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் “பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட தேச துரோகச் சட்டத்தை இப்போது பயன்படுத்தக்கூடாது என்று கூறியதோடு தேசத்துரோக வழக்குகளின் மீதான விசாரணையை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டது”. இப்போது உபா சட்டத்தின் வழியாக கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்கலாம் என்ற தீர்ப்பை தனது 5-ஆண்டு சிறைவாசம் வழியாக பெற்றுத் தந்து இருக்கிறார் உமர் காலித்.

தேசத் துரோக வழக்கை சந்தித்த போது அந்த சட்டத்துக்கே முற்றுப்புள்ளி வைத்தார் உமர். இப்போது உபா வழக்கை சந்தித்த போது பிணை வழங்கும் உரிமை பெற்றுத் தந்துள்ளார். பிணை வழங்கக் கூடாது என்று 3 நீதிபதிகள் அளித்த தீர்ப்பை 2 நீதிபதிகள் அடங்கிய அமர்வு ஏற்க மறுத்ததும் மனித உரிமைக்கு கிடைத்த வெற்றி! உமர்காலித் தன்னைப் பற்றிக் கூறும்போது “நான் ஜனநாயகத்தின் தீவிரவாதி! தேர்தல் மட்டுமே ஜனநாயகம் என்று நம்பக்கூடியவன் அல்ல; அதையும் கடந்த மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன். ஜனநாயகம் என்பது அரசியல் மட்டுமல்ல வாழ்க்கை நடைமுறையாக வேண்டும் என்பதே எனது கொள்கை” என்று தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டவர் உமர் காலித். தேசத் துரோக வழக்கிலும் சரி இப்போது உபா சட்டத்திலும் சரி உமர்காலித் மனித உரிமைகளை மீட்டுத் தந்திருக்கிறார்!

# திராவிட மாடல் சாதனைகளுக்கு விருது

முக.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்பட்ட "திராவிட மாடல்" ஆட்சி பல்வேறு சாதனைகளுக்காக கொள்கை எதிரியான ஒன்றிய பாஜக அரசிடம் இருந்தே விருதுகளைப் பெற்று வந்தது. ஆனாலும் ஆட்சியின் சாதனைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க இயலாத நிலையை தேர்தல் களம் உருவாக்கி விட்டது.




இப்போதும் அந்த சாதனை விருதுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கடலோரங்களில்இருக்கும் பல்வேறு மாநிலங்களுக்கு இடையிலான போக்குவரத்துகளுக்கான கொள்கைகள்; திட்டங்களை உருவாக்குதல்; அவற்றை வெற்றிகரமாக செயல்படுத்துதல் உள்ளிட்டவைகளில் "திராவிட மாடல்" ஆட்சியே முதலிடத்தைப் பெறுகிறது என்ற 2025ம் ஆண்டுக்கான விருதை ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது.

வேடிக்கை என்னவென்றால் இந்த பாராட்டு விருதுக்கான சான்றிதழை புதிய முதல்வர் ஜோசப் விஜயிடம் டிட்கோ அதிகாரிகள் நேரில் வழங்கி வாழ்த்து பெற்று உள்ளனர். வாழ்த்து பெறும் படத்தை இன்று தினமலர் நாளிதழ் வெளியிட்டு இருக்கிறது. நடந்தது தீய சக்தியின் ஆட்சி அல்ல; வளர்ச்சி சக்தியின் வரலாற்று சிறப்புமிக்க ஆட்சி என்பதை புதிய முதல்வர் இப்போதாவது உணரட்டும்!

# நீட் வேண்டாம்!

நீட் வினாத்தாள் கசிவு இரண்டாவது முறையாக நிகழ்ந்துள்ளது. 2024 ஆம் ஆண்டு ஒருமுறை கசிந்தது. வினாத்தாள் தயாரிக்கும் குழுவில் இருந்தவர்களே இதற்கு காரணமாக இருந்துள்ளனர். கடந்த மே 3-ம் தேதி 5432 மய்யங்களில் இருந்து தேர்வு எழுதிய 22.79 இலட்சம் மாணவர்கள் மீண்டும் ஜூன்-21ல் தேர்வு எழுத வேண்டும். மிகுந்த மன அழுத்தத்திற்கு மாணவர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்த முறை "ஆன்லைன்" வழியாக தேர்வு நடத்தப்படும் என்கிறார் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான். தமிழ்நாட்டில் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தற்போதைய முதலமைச்சர் ஜோசப் விஜய் இருவருமே நீட் தேர்வு கூடாது; பிளஸ்டு (+2) மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்துள்ளனர். கல்விக் கட்டமைப்பையே சீரழித்து வரும் நீட் வேண்டாம் என்பதே தமிழ்நாட்டின் ஒருமித்த குரல்!

# பெண்களை குழந்தை பெறும் இயந்திரமாக்கத் துடிக்கிறார் ஆந்திர முதலமைச்சர்!

பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக 3-வது குழந்தை பெற்றால் ரூ.30,000; 4-வது குழந்தை பெற்றால் 40,000 தருவதாக அறிவித்துள்ளார் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு. இது முட்டாள்தனமான கண்டிக்கத்தக்க அறிவிப்பு. பெண்களை பிள்ளை பெறும் இயந்திரமாக இழிவுபடுத்துகிறார். உலகம் முழுவதும் "குழந்தைகள் வேண்டாம்" என்ற இயக்கத்தை நோக்கி பெண்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். திருமணங்களுக்கு மாற்றாக "ஒன்றாக வாழ்தல்" என்ற முறையை தேர்வு செய்கிறார்கள். நீதிமன்றங்களும் இதற்கு சட்ட அங்கீகாரம் தருகின்றன.

ஒன்றிய பாஜக ஆட்சி குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களுக்கான தொகுதிகளைக் குறைக்கிறது என்றால் அதை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டுமே தவிர, கூடுதலாக குழந்தை பெற வேண்டும் என்று வலியுறுத்தக்கூடாது. சந்திரபாபுவின் இந்த அறிவிப்புக்கு எதிராக அம்மாநிலத்தில் எந்த எதிர்ப்புக் குரலும் வரவில்லை என்பது வெட்கக்கேடானது.

# வளர்ச்சி நிதி!

* ஆசிரியர்கள் சிவகாமி, சிவக்குமார் முன்னெடுப்பில் பெரியார் முழக்க வளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் ரூ.13,000 வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளனர்.

* கழகத் தோழர் இரண்யா மாதம் மாதம் ரூ.2,000 முழக்க வளர்ச்சி நிதி வழங்கி வருகிறார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்)

# கழகத்தை பாராட்டி குரோஷியாவிலிருந்து ஓர் உணர்ச்சி மடல்!

கழகத்தில் புதிதாக தன்னை இணைத்துக் கொண்ட தோழர் மனோஜ் ரூ.5,000 வளர்ச்சி நிதி அளித்துள்ளார். அய்ரோப்பா குரோஷியாவில் பணியாற்றி வரும் இவர் கழக செயல்பாடுகளை தொடர்ந்து கவனித்து வருகிறார். பாராட்டி கடிதம் எழுதியுள்ளார். தீண்டாமை, ஜாதிய வன்கொடுமைகள், பெண் அடிமைத்தனம் மற்றும் ஆதிக்க மனப்பான்மையோடு சக மனிதர்களை இழிவுபடுத்தும் பிற்போக்குச் சக்திகளிடமிருந்து, உழைக்கும் எளிய மக்களைக் காத்து நிற்கும் திராவிடர் விடுதலைக் கழகத்தில் என்னை ஒரு துரும்பாக இணைத்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன்.

ஜாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றின் பெயரால் மனிதர்களைப் பிரித்து, "இவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன்; இவன் படிக்க வேண்டும், இவன் குலத்தொழில் செய்ய வேண்டும்" என்று மனித மாண்பைச் சிதைக்கும் ஆரிய பார்ப்பனிய அடக்குமுறைகளுக்கு எதிராகத் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் சமரசமற்ற போர்க்களத்தில் என்னையும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்கிறேன். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் ஆகியோர் புரட்சிகரமான கொள்கைகளை நெஞ்சில் ஏந்தி, சமகாலப் பெரியாராகத் திகழும் தோழர்களோடு கைகோர்த்துத் திராவிடச் சித்தாந்தத்தை நிலைநிறுத்த நான் கடமைப்பட்டுள்ளேன். அமைப்பின் மீதான என் பற்றின் அடையாளமாகவும், கொள்கைப் பரப்புரையின் தேவையை உணர்ந்தும் என்னுடைய சிறிய பங்களிப்பாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூ. 5,000/- வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். "சனாதனம் ஒழிப்போம்! சமத்துவம் காப்போம்!"

**இவண், மனோஜ், காரைக்குடி**
*(தற்போது பணி: குரோஷியா, ஐரோப்பா)*

# புராண நாடகங்களுக்கு மாற்றாக புரட்சிகர நாடகங்களை நடத்திய கும்மம்பட்டி!

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். திண்டுக்கல் மாவட்டம் கும்மம்பட்டி குறித்த கடந்த இதழின் தொடர்ச்சி...**

திண்டுக்கல், சின்னாளப்பட்டி பகுதிகளில் அண்ணா, கலைஞர், பேராசிரியர், நாவலர் உள்ளிட்ட திமுகவின் முன்னணித் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்கள் நடந்தால், கு.சி. பழனிச்சாமி தன் பகுதியில் இருந்து மாணவர்களை அழைத்துச் செல்வார். தினசரி நூல்களைப் படிப்பது, விவாதிப்பது, பேச்சுப்பயிற்சி என இருந்த மாணவர்களுக்கு அண்ணா, கலைஞர், பேராசிரியர் உள்ளிட்டோரின் உரைகள், கொள்கை உணர்வை ஊட்டி வளர்த்தன. ‘பவளக்கொடி’, ‘வள்ளித் திருமணம்’, ‘சாரங்கதாரா’, ‘நல்லதங்காள்’ ஆகிய நாடகங்கள்தான் கும்மம்பட்டியில் ஆண்டாண்டு காலமாக நடந்தன. அவை தவிர, வேறு எந்த நாடகத்தையும் கும்மம்பட்டி மக்கள் பார்த்ததில்லை. அதனால், பகுத்தறிவுக் கருத்துகளை நாடகம்மூலம் வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது, கலைமன்றம்.

**மூன்று ஆண்டுகள் பயிற்சி எடுத்து, 1952-இல் கலைஞரின் ‘தூக்குமேடை’ நாடகத்தை நடித்தனர். அப்போது, தூக்குமேடை நாடகம் தடை செய்யப்பட்டிருந்தது.**

சுமார் மூன்று ஆண்டுகள் பயிற்சி எடுத்து, 1952-இல் கலைஞரின் ‘தூக்குமேடை’ நாடகத்தை நடித்தனர். அப்போது, தூக்குமேடை நாடகம் தடை செய்யப்பட்டிருந்தது. அதனால், ‘இளைஞர் குரல்’ என்ற பெயரில் மாற்றி, அந்த நாடகத்தை நடித்தனர். காவல் துறை, அரசு அதிகாரிகள், சுற்றுப்புற கிராமங்களில் இருந்து பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் பலரும் வருகை தந்து நாடகத்தைப் பார்த்துவிட்டு பாராட்டிச் சென்றனர்.

அதன்பிறகு, வெளியூர்களில் இருந்தும் தங்கள் ஊரில் நாடகம் நடத்த வருமாறு கலை மன்றத்திற்கு அழைப்புகள் வந்தன. ஆனால், முக்கிய வேடங்களில் நடித்த மாணவர்கள் சிலர் படித்துமுடித்து, வெளியூர்களுக்கு வேலைக்குச் சென்றுவிட்டனர். இதனால், மீண்டும் புதிய மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து கலை மன்றத்தைப் புதுப்பித்தார், கு.சி.பழனிச்சாமி. தாழ்த்தப்பட்ட மக்களை ஊருக்குள் நுழைய அனுமதிக்காத ஊர்ப் பெரியவர்கள் விதித்த கட்டுப்பாடுகளை மீறி, அழைத்து வந்ததுடன், சலவைத் தொழிலாளி ஒருவரை நாடகத்தில் நீதிபதியாக நடிக்கச் செய்து, ஊர் மக்களைப் பார்க்க வைத்தது, ’கலை மன்றம்’. செல்லம் என்ற சலவைத் தொழிலாளிதான் நாடக ஒத்திகைக்காகக் கலை மன்றத்திற்கு இடமும் வழங்கினார். கலை மன்றத்தின் நாயகர் கு.சி.பழனிச்சாமியோ வில்லனாக நடித்தார்.

அதே ஆண்டுதான் கலைஞரின் ‘பராசக்தி’ திரைப்படம் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் வெளியானது. ‘தூக்குமேடை’ நாடகத்தின் சில பகுதிகளும் ‘பராசக்தி’ படத்தில் இடம்பெற்றிருந்தன. இந்த இரண்டு காரணமும் சேர்ந்து கும்மம்பட்டி இளைஞர்களைப் ‘பராசக்தி’யைப் பார்க்கத் தூண்டியது. முதல் நாளே கும்மம்பட்டியில் இருந்து 40 இளைஞர்கள் சின்னாளபட்டிக்குச் சென்று, ‘பராசக்தி’ திரைப் படத்தைப் பார்த்தனர். இரண்டிரண்டு பேராக வரிசையாகத் திரையரங்கிற்குள் உள்ளே நுழைந்த போது, ‘கும்மம்பட்டி படை வருகிறது’ என சின்னாளப்பட்டி கழகத்தினர் ஆரவாரத்தோடு வரவேற்றுள்ளனர்.

சொந்த ஊரில் மட்டுமல்ல, பகுத்தறிவுப் படைப்புகளுக்கு தமிழ்நாட்டில் எங்கு தடையோ, எதிர்ப்போ எழுந்தாலும் கும்மம்பட்டியில் இருந்து ஆதரவுக்கரம் நீட்டியது, கலை மன்றம். எம்.ஆர்.ராதாவின் ‘கீமாயணம்’ நாடகத்திற்கு எதிர்ப்பு வந்தபோது, நேரில் சென்று நாடகத்தைக் கண்டுகளித்து ஆதரவு தெரிவித்தனர். சுற்றுப்புறப் பகுதிகளில் எங்காவது புராண நாடகங்கள் நடைபெற்றாலும்கூட அங்கு சென்று, ‘பெரியார், அண்ணா, கலைஞரைப் பற்றி பாட்டு பாடுங்கள்’ என துண்டுச்சீட்டில் எழுதிக் கொடுத்து பாடவைத்தனர். அப்படி, கலையை கொள்கை பரப்புவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்திய கலை மன்றம், 1953-இல் திமுகவை நோக்கி தன்னை நகர்த்தியது.

ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளராக மதுரை முத்து இருந்தபோது, கும்மம்பட்டிக்கு அடிக்கடி வந்துசெல்வார். கும்மம்பட்டி கலை மன்றத்தோடு நெருக்கமான தொடர்பும் கொண்டிருந்தார். பின்னாளில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சின்னாளப்பட்டி நாச்சிமுத்துவும் கும்மம்பட்டி கலை மன்றத்துடன் நெருங்கிப் பழகினார். இந்தத் தொடர்புகள் காரணமாக, 1953-இல் கலை மன்றத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகமாக இணைத்தார் கு.சி.பழனிச்சாமி. கும்மம்பட்டி சுற்று வட்டாரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் கிளை இங்குதான் உருவானது.

திண்டுக்கல், வத்தலக்குண்டு, சோழவந்தான் என முக்கிய பகுதிகளில் மட்டுமே அப்போது தி.மு.கழகம் அடர்த்தியாக இருந்தது. அந்தக் காலகட்டத்திலேயே கும்மம்பட்டி என்ற சிற்றூரில் உருவான கிளைக்கழகம், கலை மன்றத்தின் வீரியமிக்க செயல்பாடுகளால் சுற்றுப்புற கிராமங்கள் எங்கும் பரவத் தொடங்கியது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளில் இருந்து இம்மியளவும் பின்வாங்காமல், பகுத்தறிவுக் கிராமமாகவும் கும்மம்பட்டியை வளர்த்தது கலை மன்றம். புரோகிதத் திருமணங்கள் மட்டுமே நடைபெற்றுவந்த கும்மம்பட்டியில், முதன்முறையாக கு.சி.பழனிச்சாமி - இராசம்மாள் இணையருக்கு, பார்ப்பனியச் சடங்குகளை மறுத்து, சுயமரியாதைத் திருமணம் நடை பெற்றது. அதன்பிறகு, கும்மம்பட்டியில் திருமணம் நடைபெறும் வீடுகளுக்குக் கலை மன்றத்தினர் சென்று, முன்னேற்பாட்டுப் பணிகளைச் செய்துகொடுத்து, அவற்றை தமிழ் முறை திருமணங்களாக மாற்றினர். 1969-இல் சுயமரியாதைத் திருமணத்திற்கு அண்ணா சட்டபூர்வ அங்கீகாரம் தருவதற்கு முன்பே கும்மம்பட்டியில் நூற்றுக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்கள் கலை மன்றத்தால் நடந்துவிட்டன.

தில்லான், தில்லையம்மாள், அரியம்மாள், குழந்தை, குட்டியப்பன் எனக் குல தெய்வங்களின் பெயர்களே திரும்பத் திரும்ப வைக்கப்படுவது நடைமுறையில் இருந்தது. கலை மன்றம் தொடங்கப்பட்டபின், தமிழில் பல்வேறு புதிய பெயர்களைச் சூட்டத் தொடங்கினர். சிற்றரசு, வணங்காமுடி எனத் தன் வீட்டில் இருந்தே புதிய தமிழ்ப் பெயர்கள் வைக்கும் வழக்கத்தை உருவாக்கினார் சிற்றரசு. தி.மு.க.வாக மாறிய பின்னர், கும்மம்பட்டியில் தமிழ்ப்பெயர் சூட்டல் ஒரு பெரும் இயக்கமாகவே மாறிவிட்டது. சிற்றரசு, வணங்காமுடி, புகழேந்தி, கலையரசி எனக் கு.சி.பழனிச்சாமி தன் குடும்பத்தில் சூட்டிய தமிழ்ப் பெயர்கள் ஊரெங்கும் பரவின. அனைவரும் தமிழ்ப் பெயர்களையே சூட்டத்தொடங்கினர்.

## சார் பதிவாளர் சீனு.தமிழ்ச்செல்வி பணி நிறைவு பாராட்டு விழா!

தமிழ்நாடு அரசு பத்திரப்பதிவுத்துறையில் 36 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி, கடந்த 30.04.2026 தேதியன்று பணி நிறைவு பெற்ற தமிழர் உரிமைக் கழக ஒருங்கிணைப்பாளர் மா.கந்தசாமி அவர்களின் இணையர், "பெரியார் கொள்கையாளர்" சார்பதிவாளர் சீனு. தமிழ்ச்செல்வி பணி நிறைவு பாராட்டு விழா 02.05.2026 சனிக்கிழமை அன்று காலை 11 மணி அளவில் கோபிசெட்டிபாளையத்தில் உள்ள சீதா திருமண மண்டப்பதில் நடைபெற்றது.

பேரூர் ஆதினம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையேற்று தலைமையுரையாற்றினார். தற்சார்பு விவாயிகள் சங்கத்தின் தலைவர் கி.வே.பொன்னையன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் "அரசுப் பணியில் நியாமாகவும், நேர்மையாகவும் செயல்பட்டதால் அவருக்கு ஏற்பட்ட பிரச்சனைகளிலும் மற்றவர்கள் ஏற்படுத்திய பிரச்சனைகளிலும் தைரியமாக எதிர்வினையாற்றியும், பெரியாரிய கொள்கையில் (கல்லைப்) போன்று உறுதியாக நின்று செயலாற்றி பணி ஓய்வு பெறும் சீனு. தமிழ்ச்செல்வியை பாராட்டி வாழ்த்துரையாற்றினார்.




கேஏ.செங்கோட்டையன் (பொது பணித்துறை அமைச்சர்), சத்யபாமா (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), வழக்கறிஞர் ப.பா.மோகன், வந்தியத்தேவன் (ம.தி.மு.க கொள்கை பரப்புச் செயலாளர்) மற்றும் அரசு ஊழியர்கள் பங்கேற்று பாராட்டி வாழ்த்துரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் துரைசாமி (கழகப் பொருளாளர்), ப. ரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்), முத்து (திருப்பூர் மாநகர அமைப்பாளர்), கழகத் தோழர் அவினாசி ஆகயோர் கலந்து கொண்டனர்.

## சென்னிமலை செல்வராஜ் இணையர் முடிவெய்தினார்!

கழக ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் செல்வராஜ் அவர்களின் இணையர் பழனியம்மாள் (48) 17.05.2026 முடிவெய்தினார்.. அவர்களது இறுதி நிகழ்வு மாலை 7 மணியளவில் பெருந்துறை மின் மயானத்தில் நடைபெற்றது.



கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு பழனியம்மாள் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார். மறைந்த தோழர் பழனியம்மாள் (48) அவர்களின் விருப்பப்படியும், அவரின் இணையர் செல்வராஜ் அவர்களின் விருப்பப்படியும் பழனியம்மாள் அவர்களின் உடல் கோவை அரசு மருத்துவ கல்லூரிக்கு தானமாக வழங்க இசைவு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அறுவை சிகிச்சை மற்றும் பல்வேறு உடல் நல பிரச்சனைகள் காரணமாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் அன்னாரின் உடல் தானமாக பெறும் நிலையில் இல்லை என்று தெரிவித்துவிட்ட நிலையில் அவரது கண்கள் மட்டும் தானமாக வழங்கப்பட்டது.

கழகப் பொருளாளர் துரைசாமி, கழக மாநில அமைப்புச் செயலாளர் ப.ரத்தினசாமி, கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராஜன், தலைமைக் கழகப் பேச்சாளர் காவை இளவரசன், ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, ஈரோடு மாவட்ட அமைப்பாளர் குமார், ஈரோடு மாவட்டப் பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, கொடுமுடி பாண்டியன், திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, சென்னிமலை ஒன்றியச் செயலாளர் ரவி, ஆசிரியர் சிவக்குமார், ராமன், சசி, மோகன்ராஜ், முத்துலட்சுமி, ஜோதி, திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், அவினாசி ஆகிய தோழர்கள் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கழகத்தின் மூத்த பெரியார் தொண்டர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் விடை பெற்றார்!

## உடல் மருத்துவமனைக்குக் கொடையளிக்கப்பட்டது

பெரியார் கொள்கைகளை உயிர்மூச்சாக கொண்டு வாழ்ந்த கழகத்தின் மூத்த தோழர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் விடைபெற்றுக் கொண்டார். அவரது விருப்பப்படி அவரது உடல் அரசு மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது.

### கொளத்தூர் மணி

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள இரங்கல் செய்தி:**



திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாவட்டத் தலைவர் தோழர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் (83) அவர்கள் வயது மூப்பின் காரணமாக உடல் நலக்குறைவு ஏற்பட்டு கோவை அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று 17.05.26 ஞாயிறு காலை 04.30 மணியளவில் காலமானார்.

தோழர் மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன் அவர்கள் மூத்த பெரியார் தொண்டர் ஆவார். தந்தை பெரியாரை நேரில் சந்தித்தவர்.தன் வாழ்நாள் முழுவதும் பெரியார் கொள்கைகளை பரப்பி அதனை தன் சொந்த வாழ்விலும் கடைபிடித்து செயல்படுத்திய கொள்கைப் பற்றாளர் ஆவார். மிகவும் துணிச்சலாக செயல்படக்கூடியவர். மிகவும் சுறுசுறுப்பானவர். வயதான நிலையிலும் ஒரு இளைஞரை போல பெரியார் பணி செய்வதில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் உடையவர்.அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் தோழமை உணர்வு பாராட்டி அரவணைத்து அழைத்துச் சென்றவர். தன்னை சந்திக்க வருபவர்களிடமெல்லாம் பெரியார் குறித்தும், திராவிடர் இயக்க வரலாற்றுச் சம்பவங்களையும் செய்திகளையும் நினைவூட்டி இடையறாது பேசி வந்தவர்.

மேட்டுப்பாளையத்தில் மதவாத சக்திகளுக்கு எதிரான பரப்புரையில் தாக்குதலை நேர் கொண்டு சந்தித்து அவர்களின் இடையூறை முறியடித்து தொடர் பரப்புரையில் ஈடுபட்டவர். இப்படியான ஆற்றல்மிகு செயல்வீரரை இழந்திருப்பது திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு பேரிழப்பு ஆகும்.தோழர் மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன் அவர்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புகழ் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழரின் இன இழிவு ஒழிப்புப் பணியை தொடர்ந்து தொய்வின்றி முன்னெடுத்துச் செல்வோம்.அதுவே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான இறுதி மரியாதை ஆகும்.

### விடுதலை இராசேந்திரன்

**கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் விடுத்துள்ள இரங்கல் செய்தி:**

மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன் முடிவடைந்து விட்டார் என்ற செய்தி என்னை மிகவும் கலங்க செய்துவிட்டது. மிகுந்த மன அழுத்தத்துடன் இந்த பதிவை நான் வெளியிடுகிறேன்.

திராவிடர் கழக காலத்தில் இருந்து பெரியார் கொள்கையை தனது வாழ்க்கையாக சுமந்து கொண்டு பயணித்த தீவிர பெரியார் தொண்டர். என்னுடன் தனிப்பட்ட முறையில் மிகவும் உறவு கொண்டவர்; மாதத்திற்கு இருமுறையாவது அலைபேசியில் அழைத்து என்னிடம் பேசுவது அவரது வழக்கம்; அந்த உரையாடல் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நீடிக்கும்; அத்தனையும் இயக்கத்தில் பழைய வரலாறுகள் தொடர்புடையதாகவே இருக்கும் பழைய நினைவுகளை அசைபோடுவதற்கு இயக்கத்தில் எனக்கு கிடைத்த ஒரே தோழர் அவராகவே இருந்தார்.

அவரோடு உரையாடி இயக்க வரலாறுகளை மலரும் நினைவுகளாக பேசுவதில் மிகுந்த மன ஆறுதலும் உற்சாகமும் இருவருக்குமே கிடைக்கும். இயக்கத்தின் பேச்சாளர்கள் திருவாரூர் தங்கராசு, திருச்சி செல்வேந்திரன் ஆகியோரோடு நெருக்கமாக பழகியவர்.

மன்னார்குடியில் பெரியார் நடத்திய தமிழ்நாடு விடுதலை மாநாட்டில் அவர் பங்கேற்றதை நினைவு கூறுவார். கடந்த கால பெரியார் இயக்க வரலாறுகளோடு பயணித்த பெருமைமிக்க பெரியார் தொண்டர்களின் மிச்சமாக அவர் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இருந்து வந்தார்.

பெரும்பாலும் இளைஞர்களைக் கொண்ட திராவிடர் விடுதலைக் கழகத்தில் இந்த தீவிர பெரியாரியவாதி தன்னை இணைத்துக் கொண்டு இளைஞர்களோடு தன்னை தகவமைத்துக் கொண்டு செயல்பட்டு வந்தார். அண்மையில் அவரது மகனின் அகால மரணம் மிகப் பெரும் துயரம் அதில் கடுமையான உளப்பாதிப்புக்கு உள்ளானார். ஆனாலும் அதிலிருந்து மீண்டு வருவதற்கு கொள்கை உணர்வுகளே ஆறுதல்களை வழங்கியது. பெரியார் திராவிடர் கழகத்தில் இருந்தபோது மேட்டுப்பாளையத்தில் பல நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைத்தார். கொள்கை எதிரிகளின் மிரட்டலுக்கு அஞ்சாமல் பணியாற்றினார். இந்து முன்னணிகளின் சலசலப்புகளை எதிர்கொண்டு மேட்டுப்பாளையத்தில் அவர் நடத்திய பொதுக்கூட்டத்தை இப்போதும் மறக்க முடியாது! மேட்டுப்பாளையத்தில் அனைத்துக் கட்சி தோழர்களாலும் மதிக்கப்பட்டவர். அவருக்கான நட்பு வட்டாரம் ஒன்றை உருவாக்கி வைத்திருந்தார். நிறைய நூல்களைப் படிப்பார் படித்துக் கொண்டிருக்கும் போது அது தொடர்பான கருத்துக்களை உடனே அலைபேசியில் தொடர்பு கொண்டு என்னிடம் பகிர்ந்து கொள்வார்.

சேலத்தில் கழகம் நடத்திய மாநில மாநாட்டில் கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் கலந்து கொண்டார். எனக்கு இப்போது வயது 80; அவரது வயது 83. மாணவப் பருவத்தில் இருந்து இயக்க உணர்வோடு நான் வளர்ந்தவன். அந்த உணர்வுகளையும் வரலாறுகளையும் எனது வயதை ஒத்த அவரோடு பகிர்ந்து கொள்வதிலும் உரையாடுவதிலும் உற்சாகமும் மன அமைதியும் கிடைத்தது. இனி அந்த உணர்வுகள் இல்லாமல் போய்விட்டதே! என்று கவலைப்படுகிறேன் எனது புகழ் வணக்கத்தை கண்ணீரோடு அர்ப்பணிக்கிறேன்!.

### பால்.பிரபாகரன்

**கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் விடுத்துள்ள இரங்கல் செய்தி:**

கோவை மாவட்டக் கழகத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமசந்திரன் இன்று (17.05.2026) கோவை அரசு மருத்துவமனையில் மறைவுற்றார் என்ற செய்தி பெரும் துயர் கொள்ள செய்தது.

யாருக்கும் எந்த நிலையிலும் தன் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாத கொள்கை வைரம் அவர். சிறியவராக இருந்தாலும் தந்தை பெரியார் போன்று வாங்க என மரியாதையாக அழைக்கும் பண்பு கொண்டவர். மன்னார்குடியில் பிறந்தாலும் தன் பெயருக்கு பின்னால் மேட்டுப்பாளையம் என்ற தான் வாழ்ந்த ஊரையே அடையாளமாக்கியவர் சாதாரண தோழர்களையும் மேடையில் பேச வைக்க மேடை போட்டு கொடுத்து அழகு பார்த்தவர். திராவிடர் இயக்கத் தலைவர்கள் அனைவரிடமும் பழகியவர்.

கழகம் சார்பில் பரப்புரைப் பயணம் அவர் பகுதிக்கு செல்லும் பொழுது எல்லாம் சிறப்பான ஏற்பாட்டை இளைஞர் போன்று செய்து முடிக்கும் கடமை தவறா பெரியார் தொண்டர். அகவை முதிர்வு காரணமாக மறைவுற்றாலும் ஏற்க மனமில்லை

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு அவரை அவரது இல்லத்தில் சந்தித்தபோது புகைப்படம் எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். தந்தை பெரியாருடன் அய்யா இராமசந்திரன் எடுத்துக்கொண்ட புகைப்படம் பின்பகுதியில் இருக்குமாறு எடுங்கள் என்றார். எப்பொழுதும் கொள்கை பேசும் வேழும் தன் பரப்புரையை முடித்துக் கொண்டார். இனி என்று காண்போம் அய்யா இராமசந்திரனை! கொள்கை மாறா தலைவனை கொள்கைக்கு புறம்பான செயலின்றி அவர் கனவை நிறைவேற்றுவதே குடும்பத்தார் இயக்கத் தோழர்கள் அனைவரும் அவருக்குச் செய்யும் இறுதி வணக்கமாகும். கொள்கை மாவீரருக்கு புகழ் வணக்கம்!

அவரது மறைவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை 5.00 மணி அளவில் கோவை அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த இராமச்சந்திரன் உடலிற்கு புகழ் வணக்கம் செலுத்தினார்.

இராமச்சந்திரன் அவர்களின் விருப்பப்படி அவரின் குடும்ப உறுப்பினர்களின் ஒப்புதலோடு மருத்துவக் கல்லூரி மாணவர்களின் படிப்பிற்காக கோவை அரசு மருத்துவ கல்லூரிக்கு தோழர் இராமச்சந்திரன் அவர்களின் உடல் கொடையாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் துரைசாமி, கழக மாநில அமைப்புச் செயலாளர் ப. ரத்தினசாமி, கழக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராஜன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல் ஆகிய மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டு புகழ் வணக்கம் செலுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : May 21, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran